**SJKT SITHAMBARAM PILLAY,**

**தேசிய வகை சிதம்பரம் பிள்ளை தமிழ்ப்பள்ளி**

பெயர் : __________ ஆண்டு : 6

கிரகணங்கள் தொடர்பான வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிவு செய்க.

1. பகலில் வானத்தை இருள் சூழ்கிறது.மிருகங்கள் அனைத்தும் தம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றன.ஏன்?

A. மழை பொழியவிருக்கிறது.
B. சந்திர கிரகணம் ஏற்படுகிறது.
C. சூரிய கிரகணம் ஏற்படுகிறது.

2. சூரிய கிரகணத்தின் போது என்ன மாற்றங்கள் தோன்றும்?

A. தட்பவெப்ப நிலை குறையும்;வானத்தை இருள் சூழும்.
B. தட்பவெப்ப நிலை அதிகரிக்கும்;வானம் வெளிச்சமாகத் தோன்றும்.
C. தட்பவெப்ப நிலையில் மாற்றமிருக்காது;வானம் வெளிச்சமாகத் தோன்றும்.

3. சந்திர கிரகணம் ஓர் ஆண்டில் எத்தனை முறை நிகழக்கூடும்?

A. 13 முறை
B. 2-3 முறை
C. 5 முறை

4. சந்திர கிரணமும் சூரிய கிரகணமும் ஏற்படக் காரணம் என்ன?

A. பூமியும் சந்திரனும் சூரியனைச் சுற்றி வருகையில் அவற்றின் நிலையின் மாற்றம் ஏற்படுவதால்.
B. சூரியனைச் சுற்றி உள்ள கோள்களின் நிழல் ஏற்படுவதால்.
C. பூமியும் சந்திரனும் ஒளிப்புகாப் பொருள் என்பதால்.

5. ஒளியின் எந்த இயல்பு கிரகணங்கள் ஏற்படக் காரணமாகவுள்ளது?

A. ஒளி நேர்க்கோட்டில் பயணிக்கிறது.
B. ஒளி பிரதிபலிக்கும்.
C. ஒளி வளைந்து பயணிக்கிறது.

ஆக்கம் நாகதேவி நாராயணன்

LIVEWORKSHEETS